**நீர்வளத்துறை**

**அனுப்புநர்**

**பொறி.வே.தாமோதரன்,பி.இ.,**
செயற்பொறியாளர்,நீவது.,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் – 638 451.

**பெறுநர்**

உறுப்பினர் செயலர் / இணை
இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு
அலுவலம், மாநகராட்சி வணிக
வளாகம், டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோயம்புத்தூர் -641018

---

**கடித எண்.வப / இவஅ.2 / கோ.73 /** 86 ~~96~~ **/2022 / நாள். 11 .02.2022**

---

அய்யா,

**பொருள்** மனைப்பிரிவு – கோயம்புத்தூர் மாவட்டம் - பேரூர் வட்டம் – வீரகேரளம் கிராமம் – தி/வாஸ்ரீ கனகதுர்கா ப்ராபர்டீஸ் டெவலப்பர்ஸ் (பி) லிமிடெட்க்கு பாத்தியப்பட்ட க.ச.எண்கள்.475/1,2 -ல் 4.54 ஏக்கர் பரப்பில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரியது – வாரியின் சிறுபாலம் குறித்த விபரம் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை**
1. தங்களின் நடப்பு கடித எண். 852 / 2021 / உதிகு / நாள்.06.09.2021.
2. உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.கோ.58 / 2022 / நாள்.02.01.2022.

********

பார்வை 1-ல் காணும் தங்களது கோரிக்கையின்படியும் பார்வை 2-ல் காணும் உதவிசெயற்பொறியாளர்,நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வீரகேரளம் கிராமத்தில் தி/வாஸ்ரீ கனகதுர்கா ப்ராபர்டீஸ் டெவலப்பர்ஸ் (பி) லிமிடெட்க்கு பாத்தியப்பட்ட க.ச.எண்கள்.475/1,2-ல் 4.54 ஏக்கர் பூமியில் அமையவுள்ள மனைப்பிரிவுகளுக்கு செல்ல க.ச.எண்.478/3-ல் செல்லும் வாரி மற்றும் வண்டிப்பாதையின் குறுக்கே 10.00 மீட்டர் நீளம், 1.00 மீட்டர் அகலம், 1.00 உயரம் உள்ள அளவுகளில் ஒரு கண்ணுடன் கூடிய சிறுபாலம் அமைத்துக்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் நீர்வளத்துறையின் அனுமதி வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வீரகேரளம் கிராமம் க.ச.எண்.478/3-ல் செல்லும் வாரி மற்றும் வண்டிப்பாதையின் குறுக்கே கட்டப்படும் சிறுபாலமானது 10.00

மீட்டர் நீளம், 1.00 மீட்டர் அகலம், 1.00 உயரம் உள்ள அளவுகளில் ஒரு கண்ணுடன் கூடியதாக இருக்க வேண்டும்.

2. கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வீரகேரளம் கிராமம் க.ச.எண்கள்.475/1,2-ல் உள்ள பூமியில் மட்டுமே மனைப்பிரிவு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் வட்டம், வீரகேரளம் கிராமம் க.ச.எண்கள்.475/1,2-ல் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அருகில் உள்ள வாரியில் சேராதவாறு கழிவுநீர் வாய்க்கால் மற்றும் சுத்திகரிப்பு அமைப்புகள் மனுதாரரின் பூமியின் எல்லைக்குள் அமைக்கப்பட வேண்டும். கழிவுப்பொருட்களை வாரியில் கொட்டி நீரோட்டத்திற்கு தடை ஏற்படுத்தக்கூடாது.
4. மேற்படி வாரி மற்றும் அதற்கு அருகாமையில் ஆக்கிரமிப்புகள் செய்வதோ மற்றும் பாதை அமைக்கவோ கூடாது.
5. வாரியின் நீரோட்டத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் எவ்வித கட்டுமான பணிகளும் மேற்கொள்ளக்கூடாது.
6. இயற்கை இன்னல்களால் மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்படும் இடர்பாடுகளுக்கு இத்துறை பொறுப்பேற்காது.
7. மனுதாரரால் அனுமதி பெற சமர்ப்பித்த ஆவணங்கள் போலியானது என பின்னர் தெரிய வருமாயின், வழங்கப்பட்ட அனுமதி எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படுவதுடன், தகுந்த குற்றவியல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படும். இவ்வனுமதி ஆணையை நீர்வளத்துறை அலுவலர்கள் கேட்கும்போது காண்பிக்கப்பட வேண்டும்.
8. மேற்படி பூமியில் மனைபிரிவு அமைக்க உள்ளூர் திட்டக்குழுமம் அனுமதி வழங்க மட்டுமே இக்கருத்துரு வழங்கப்படுகிறது. பிற உபயோகத்திற்கு இச்சான்றை பயன்படுத்தக்கூடாது.

11/2/22

செயற்பொறியாளர்,நீவது.,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் - 638 451.

11/02/22